[1987 மார்ச் 6]

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விடை (அ) சாகோசர்வ் என அழைக்கப்படும் சேலம் மாவட்ட ஸ்டார்ச் மற்றும் ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழில் கூட்டுறவு சங்கத்தில் தற்போது 649 பேர் உறுப்பினர்களாக உள்ளார்கள்.

(ஆ) விவசாய விளைபொருளான மரவள்ளிக் கிழங்கினை நேரடியாகக் கொள்முதல் செய்து மாற்றுப் பொருளாக உற்பத்தி செய்யக்கூடிய தொழில் அமைப்புகள் தற்போது இல்லை.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சேலம் மாவட்டத்தில் சாகோசர்வ் கூட்டுறவு சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. அதிலே ஸ்டார்ச், ஜவ்வரிசி கொள்முதல் செய்து, வியாபாரிகளுக்கு விலைக்கு விற்கிறார்கள். அந்தக் கொள்முதல் செய்ததில் எவ்வளவு லாபம் கிடைத்திருக்கிறது? அதிலே அவர்களுக்கு எவ்வளவு டிவிடென்ட் கொடுத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுபற்றிய குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போடவும்.

தாட்கோ மூலம் ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள்

100—(*வினா எண். 9296) திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்தில் மத்திய, மாநில அரசுகளின் மானியம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டத்திற்கு மத்திய அரசு மானியம் எதுவும் வழங்குவதில்லை. மாநில அரசு வீடொன்றுக்கு ரூ. 6,000 சமவெளிப் பகுதியிலும், ரூ. 9,000 மலைப்பாங்கான பகுதியிலும் மானியம் வழங்குகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாட்கோ மூலம் ஒன்றிய வாரியாக வருடத்திற்கு எவ்வளவு வீடுகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தாட்கோ மூலம் ஒன்றிய வாரியாகப் பிரித்துக் கொடுப்பதில்லை. மாவட்ட ஆட்சியாளர்கள் மூலமாகப் பட்டா கொடுக்கப்பட்ட இடங்களில், இங்கேயிருந்து, அரசு மூலமாக உத்தரவு வழங்கப்படுகிறது.

திரு. ஆர். ரெங்கசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டா வழங்கியிருக்கும் எல்லா ஆதி திராவிட மக்களுக்கும் தாட்கோ மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள், ஒரு ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்ற நியதியில் 3 ஆண்டுகளுக்கு 30 லட்சம் வீடுகளைக் கட்டிக்கொடுக்கின்ற ஒரு நல்ல திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதன் வாயிலாக எங்கெங்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கின்றதோ அங்கெல்லாம் வீடு கட்டிக்கொடுக்கப்படும்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை ஆதிதிராவிட மக்களுக்கு வீடு கட்டிக்கொடுக்கும் திட்டத்தில் தாட்கோ துறை மூலம் ரூ. 3 ஆயிரம் அளவிற்கு அனுமதி அளித்து அவர்களை வீடு கட்டிக் கொள்ளச் சொன்னார்கள். அந்த அரிஜனங்கள் பட்டாவை அரசிடம் கொடுத்துவிட்டு இப்போது திண்டாடுகிறார்கள். வீடுகள் பாதியில் இருக்கின்றன. ஏழையெளிய விவசாயிகளுக்குக் கூட்டுறவுத் துறையில் கொடுத்த கடனை ரத்து செய்தது போல அந்தத் தொகையை ரத்துசெய்து விட்டு அந்தப் பட்டாக்களைத் திரும்பக் கொடுக்கவேண்டும். அவர்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ மூலம் கட்டிக் கொடுக்கின்ற வீடு முழு மானியத்தோடு கட்டும் வீடாகும். 1984-க்கு முன்னாலே ரூ 3,250 கொடுக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே, 1984-லிருந்து அது ரூ. 6,000 ஆக உயர்த்தப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தத் தொகை கூட்டுறவுத் துறை மூலமாக கிராமத்திலே இருக்கின்ற வீடு கட்டும் சங்கத்தின் வாயிலாக கொடுக்கப்பட்டதாகும். ஆகவே அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை மாண்புமிகு றுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

1987 மார்ச் 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

வறட்சி நிலை பற்றி மைய அரசுக்கு அறிக்கை அளிப்பது குறித்து

திரு. கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் மிகவும் பிரதானமான இடத்தைப் பெற்று இருப்பது 'தமிழகத்திலே கடுமையான வறட்சி நிலை' என்பது. அந்த வறட்சி நிலையைப் பற்றி அத்தனை பேர்களும் தங்களுடைய கருத்துக்களை எடுத்து வைத்தபோது, மதிப்பிற்கும் மரியாதைக்கும்உரிய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த வறட்சி நிலைபற்றி மாதந்தோறும் மத்திய அரசுக்கு அறிக்கை தருவதாகவும், அந்த அறிக்கையின் பலனை எதிர்பார்த்துக்கொண்டு இருப்பதாகவும் இந்த அவைக்குத் தெரிவித்தார்கள். நான் தலைவர் அவர்களின் அனுமதியோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புவது, தரமான பத்திரிகை தினமணியில் வந்தது. மாநிலங்கள் அவையில் குறிப்பிட்ட செய்தி ஒன்றை இப்போது அவையின் கவனத்திற்கு வைக்க விரும்புகிறேன்.

தமிழ்நாடு அரசுக்கு ஏற்கனவே 31.77 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. 'திரும்ப திரும்ப ஞாபகப்படுத்தியும்' வார்த்தைகளைக் கொஞ்சம் கவனிக்கக் கேட்டுக் கொள்கிறேன். 'திரும்ப திரும்ப ஞாபகப்படுத்தியும், சேதத்தின் அளவு மற்றும் தேவையான நிவாரணம் தொடர்பாக இம்மாநில அரசு இதுவரை விரிவான அறிக்கை எதையும் சமர்ப்பிக்கவில்லை' என்று திரு. கோபாலசாமிக்கு மைய அமைச்சர் திரு. மக்வானா அவர்கள் பதில் தெரிவித்தார்.

தவறான தகவலைத் தந்தது நிதி அமைச்சரா? இங்கே இருக்கின்ற நிதி அமைச்சரா அல்லது திரு. மக்வானா அவர்களா என்பதை நான் இந்த நேரத்திலே உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நாம் முந்நூற்று சில்லரை கோடி ரூபாய் அளவிற்கு கேட்டு இரண்டு குழுக்கள்